# DEPOSITION OF WITNESS

(Chapter XXV of Bharatiya Nagarik Suraksha Sanhita, 2023)
IN THE COURT OF JUDICIAL MAGISTRATE NO.1, SANKARI.

| | | | |
|---|---|---|---|
| Case No | : C.C.12/2026 | Date | : 03.03.2036 |
| Deposition of Witness for | : அ.சா.1 | Taluk | : |
| Name | : சக்திவேல் | Calling | : |
| Father Name | : துளசிமணி | Religion | : |
| Village | : | Age | : |

Solemnly affirmed in accordance with the Provisions of Act X of 1873 on the day of 03.03.2036.

(எதிரி ஆஜர்).

**அரசு தரப்பு முதல் விசாரணை** :

1) நான் தற்போது சேலம் மாவட்டம், எடப்பாடி வட்டம், தங்காயூர் கிராமம், பில்லுபாளிகாட்டில் வசித்து லாரி ஓட்டுநராக வேலை செய்து வருகிறேன். கடந்த 07-01-2025 ம் தேதி, இரவு சுமார் 09.00 மணியளவில் எனது தம்பி சின்னராஜா, என்பவர் வீட்டிற்கு வருவதற்காக என்னுடைய Splendor plus இருசக்கர வாகனத்தில் அக்கமாபேட்டை ரிங் ரோட்டில் இருந்து கெமிக்கல் பிரிவிற்கு திரும்பும்போது, சங்ககிரி நோக்கி வந்த பல்சர் இருசக்கர வாகனம் மோதி விபத்து ஏற்பட்டதாகவும், அவரை சங்ககிரி அரசு மருத்துவமனையில் சிகிச்சையில் சேர்த்திருப்பதாக எனது நண்பர் எனக்கு தொலைபேசியின் மூலம் தகவல் சொன்னார்.

2) உடனே, நான் மருத்துவமனைக்கு சென்று பார்த்தபோதுஎ னது தம்பிக்கு வலது காலில் எலும்பு முறிவு ஏற்பட்டிருந்தது. அவரை மேல்சிகிச்சைக்காக கோவை கங்கா மருத்துவமனையில் சிகிச்சையில் சேர்த்தேன். எனது தம்பி மயக்க

நிலையில் இருந்ததால் போலிசார் மருத்துவமனை வந்து என்னிடம் புகார் வாக்குமூலம் பெற்று சென்றனர். என்னிடம் காட்டப்படும் புகார் வாக்குமூலத்தில் உள்ள கையொப்பம் என்னுடையது தான் (**புகார் வாக்குமூலம் அ.சா.ஆ.1 ஆக குறியீடு செய்யப்படுகிறது**). இது சம்பந்தமாக போலிசார் என்னை விசாரணை செய்தனர்.

**குறுக்கு விசாரணை** :-

சாட்சியை குறுக்கு விசாரணை செய்ய எதிரி தரப்பிற்கு வாய்ப்பளித்தும் சாட்சியை குறுக்கு விசாரணை செய்யவில்லை.

Sd/-S.Sathiya,
Judicial Magistrate No.1,
Sankari.

Sd/-Sakthivel

<u>DEPOSITION OF WITNESS</u>

(Chapter XXV of Bharatiya Nagarik Suraksha Sanhita, 2023)
IN THE COURT OF JUDICIAL MAGISTRATE NO.1, SANKARI.

| | | | |
|---|---|---|---|
| Case No | : C.C.12/2026 | Date | : 03.03.2036 |
| Deposition of Witness for | : அ.சா.2 | Taluk | : |
| Name | : வைரவேல் | Calling | : |
| Father Name | : சித்தன் | Religion | : |
| Village | : | Age | : |

Solemnly affirmed in accordance with the Provisions of Act X of 1873 on the day of 03.03.2036.

<u>(எதிரி ஆஜர்).</u>

**<u>அரசு தரப்பு முதல் விசாரணை :</u>**

1) நான் தற்போது சேலம் மாவட்டம், எடப்பாடி வட்டம், வெள்ளாளபுரத்தில் வசித்து விவசாயம் செய்து வருகிறேன். கடந்த 07-01-2025 ம் தேதி, இரவு சுமார் 09.00 மணியளவில் நானும், எனது மனைவியும் சேலத்தில் இருந்து வீட்டிற்கு செல்வதற்காக இருசக்கர வாகனத்தில் வந்துகொண்டிருந்தோம். அப்போது, சின்னராஜா என்பவர் வீட்டிற்கு வருவதற்காக அவரது Splendor plus இருசக்கர வாகனத்தில் அக்கமாபேட்டை ரிங் ரோட்டில் இருந்து கெமிக்கல் பிரிவிற்கு திரும்பும்போது, சங்ககிரி நோக்கி வந்த பல்சர் இருசக்கர வாகனம் வேகமாக வந்து அவர்மீது மோதி விபத்து ஏற்பட்டுவிட்டது.

2) விபத்தில் Splendor plus இருசக்கர வாகனத்தில் வந்தவருக்கு வலது காலில் பலத்த காயம் ஏற்பட்டுவிட்டது. பின்னர், இருசக்கர வாகனங்களில் வந்த இருவரும் கீழே விழுந்துவிட்டார்கள். அவர்களை 108 ஆம்புலன்ஸ் மூலம் சங்ககிரி

அரசு மருத்துவமனைக்கு அனுப்பி வைத்தோம். ஆஜர் எதிரி தான் பல்சர் இருசக்கர வாகனத்தை ஓட்டிவந்த நபர் ஆவார். இது சம்பந்தமாக போலிசார் என்னை விசாரணை செய்தனர்.

**<u>குறுக்கு விசாரணை</u>** :-

சாட்சியை குறுக்கு விசாரணை செய்ய எதிரி தரப்பிற்கு வாய்ப்பளித்தும் சாட்சியை குறுக்கு விசாரணை செய்யவில்லை.

Sd/-S.Sathiya,

Sd/-Vairavel

Judicial Magistrate No.1,

Sankari.

# DEPOSITION OF WITNESS

(Chapter XXIII Code of Criminal Procedure)
IN THE COURT OF JUDICIAL MAGISTRATE NO.1, SANKARI.

| | | | |
|---|---|---|---|
| Case No | : C.C.12/2026 | Date | : 03-03-2026 |
| Deposition of Witness for | : **அ.சா.3** | Taluk | : |
| Name | : **திரு.அருண்குமார்** | Calling | : |
| Father/Husband Name | : | Religion | : |
| Village | : | Age | : |

Solemnly affirmed in accordance with the Provisions of Act X of 1873 on the day of 03.03.2026.

(எதிரி ஆஜர்).

**அரசு தரப்பு முதல் விசாரணை** :

1) நான் தற்போது சேலம் மாவட்டம், சங்ககிரி காவல் நிலையத்தில் காவல் உதவி ஆய்வாளராக பணிபுரிந்து வருகிறேன். இந்த வழக்கின் புலன் விசாரணை அதிகாரியான காவல் உதவி ஆய்வாளர் திரு.கண்ணன், அவர்கள் பணிமாறுதலில் சென்றுவிட்டதால், அவரின் கையொப்பம் எனக்கு நன்கு பரீட்சையம் என்பதால் அவருக்கு பதிலாக ஆவணங்களின் அடிப்படையில் சாட்சியம் அளிக்கிறேன். கடந்த 11-01-2025 ம் தேதி, 15.00 மணிக்கு சங்ககிரி காவல் நிலையத்தில் காவல் உதவி ஆய்வாளராக திரு.கண்ணன், அவர்கள் பணிபுரிந்தபோது, முன்னதாக சங்ககிரி அரசு மருத்துவமனை மற்றும் கோவை கங்கா மருத்துவமனையில் இருந்து கிடைக்கபெற்ற சின்னராஜா, என்பவரின் RTA தகவலின்பேரில், கோவை கங்கா மருத்துவமனை சென்று பார்த்தபோது சின்னராஜா, மயக்க நிலையில் இருந்ததால் உடன் இருந்து அவரது அண்ணன் சக்திவேல், என்பவரை விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்து நிலையம் வந்து புகார் வாக்குமூலத்தின் பேரில் சங்ககிரி காவல்

நிலைய குற்ற எண்.16/2025, சட்டப்பிரிவுகள் 281, 125(a) of BNS-ஆகிய பிரிவின் கீழ் முதல் தகவல் அறிக்கை பதிவு செய்துள்ளார். முதல் தகவல் அறிக்கையை, வாதியின் புகார் வாக்குமூலத்துடன் இணைத்து கனம் குற்றவியல் நீதித்துறை நடுவர் எண்.1, சங்ககிரி அவர்களுக்கும், மற்ற நகல்களை சம்பந்தப்பட்ட உயர் அதிகாரிகளுக்கு அனுப்பி வைத்துள்ளார் (**முதல் தகவல் அறிக்கை அ.சா.ஆ.2 ஆக குறியீடு செய்யப்படுகிறது.**)

2) பின்னர், அன்றைய தினமே, மாலை சுமார் 04.00 மணிக்கு சம்பவயிடம் சென்று சாட்சிகள் சந்தோஷ் மற்றும் ரங்கதுரை ஆகியோர்கள் முன்னிலையில் சம்பவ இடத்தை பார்வையிட்டு மாதிரி வரைபடம் வரைந்து பார்வை மகஜர் தயார் செய்து சாட்சிகள் கையொப்பம் பெற்றுள்ளார் **(பார்வை மகஜர் மற்றும் மாதிரி வரைபடம் முறையே அ.சா.ஆ.3 மற்றும் அ.சா.ஆ.4 ஆக குறியீடு செய்யப்படுகிறது).**

3) பின்னர், சாட்சிகளை விசாரணை செய்ததில் எதிரி தேவா, த/பெ.வடிவேல், என்பவர் TN 52 AB 3678 என்ற பதிவு எண் கொண்ட Pulsar-160 இருசக்கர வாகனத்தை அதிவேகமாகவும், அஜாக்கிரதையாகவும் ஓட்டிவந்து மோதி விபத்தை ஏற்படுத்தியது உண்மையென தெரிந்து எதிரி தேவா, த/பெ.வடிவேல், என்பவரை தேடிவந்த நிலையில் கடந்த 21.02.2025 ஆம் தேதி, பிற்பகல் சுமார் 12.15 மணிக்கு சங்ககிரி காவல் நிலையம் முன்பு வைத்து எதிரியை கைது செய்து தக்க இருநபர் நிலைய பிணையில் விடுவித்துள்ளார்.

4) பின்னர், கடந்த 06-03-2025ம் தேதி, இவ்வழக்கில் விபத்தை ஏற்படுத்திய TN 52 AB 3678 என்ற பதிவு எண் கொண்ட Pulsar-160 இருசக்கர

வாகனம் மற்றும் கடந்த 15-05-2025 ம் தேதி, விபத்திற்குள்ளான TN 52 A 0355 என்ற பதிவு எண் கொண்ட Splendor Plus இருசக்கர வாகனத்தையும் வேண்டுகோள் கடிதம் கொடுத்து மோட்டார் வாகன ஆய்வுக்கு அனுப்பி வைத்து, பின்னர், வாகனங்களை ஆய்வு செய்த மோட்டார் வாகன ஆய்வாளர் திரு.செந்தில்குமார் என்பவரை கடந்த 20-05-2025 ம் தேதி விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்து ஆய்வறிக்கைகளை பெற்றுள்ளார். ( **TN 52 AB 3678 என்ற பதிவு எண் கொண்ட Pulsar-160 இருசக்கர வாகனம் மற்றும் TN 52 A 0355 என்ற பதிவு எண் கொண்ட Splendor Plus இருசக்கர வாகனம் ஆகியவற்றின் மோட்டார் வாகன ஆய்வு அறிக்கைகள் முறையே அ.சா.ஆ.5 மற்றும் அ.சா.ஆ.6 ஆக குறியீடு செய்யப்படுகிறது**).

5) பின்னர், அன்றைய தினமே, விபத்தில் காயமடைந்த சின்னராஜா, என்பவருக்கு சிகிச்சை அளித்த கோவை கங்கா மருத்துவமனை மருத்துவர் திரு.குமணன் என்பவரை விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்து சின்னராஜா, என்பவரின் விபத்து பதிவேட்டு அறிக்கை மற்றும் காயச்சான்றிதழ் பெற்றுள்ளார். (**விபத்து பதிவேட்டு அறிக்கை மற்றும் காயச்சான்றிதழ் முறையே அ.சா.ஆ.7 மற்றும் அ.சா.ஆ.8 ஆக குறியீடு செய்யப்படுகிறது**).

6) பின்னர், சின்னராஜா, என்பவருக்கு ஏற்பட்ட காயங்கள் கொடுங்காயங்கள் என மருத்துவர் காயச்சான்று வழங்கியதால் அன்றைய தினமே, இவ்வழக்கின் சட்டப்பிரிவுகள் 281, 125(a) of BNS-பிரிவிலிருந்து சட்டப்பிரிவுகள் 281, 125(b) of BNS-பிரிவாக மாற்றம் செய்து சட்டப்பிரிவு மாறுதல் அறிக்கையை கனம் நீதித்துறை நடுவர் எண்-1, சங்ககிரி அவர்களுக்கு அனுப்பி வைத்துள்ளார். (**சட்டப்பிரிவு மாறுதல் அறிக்கை அ.சா.ஆ.9 ஆக குறியீடு செய்யப்படுகிறது**).

7) அத்துடன் இவ்வழக்கின் புலன் விசாரணை முடித்து எதிரியின் மீது சட்டப்பிரிவுகள் 281, 125(b) of BNS- ஆகிய பிரிவுகளின் கீழ் குற்ற இறுதி அறிக்கை தயார் செய்து கனம் நீதிமன்றத்தில் தாக்கல் செய்துள்ளார்.

**<u>குறுக்கு விசாரணை</u> :**

எதிரி தரப்பில் சாட்சியை குறுக்கு விசாரணை செய்ய வாய்ப்பளித்தும் குறுக்கு விசாரணை செய்யவில்லை.

Sd/-S.Sathiya,
Judicial Magistrate No.1,
Sankari.

Sd/-Arunkumar